இயல் 6
முடிவுரை

முன்னுரையில் கூறியது போன்று இவ்வாய்வு தமிழ்த் தரவுகளைப் பழந்தமிழ் தரவு, இடைக்காலத் தமிழ் தரவு, தற்காலத் தமிழ் தரவு என்று காலவாரியாகப் பகுத்துக்கொண்டு வரலாற்று அடிப்படையில் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஏற்பட்ட மாற்றங்களைத் தர முயலவில்லை. சங்ககாலத் தமிழ்த் தரவை வைத்துக் கொண்டு பெயர்ச் சொற்களின் திரிபையும் ஆக்கத்தையும் ஆய்ந்து பெயர்ச் சொற்களின் உருபனியல் அமைப்பை அறிந்து கொண்டு அதைத் தற்காலத் தமிழ் தரவு அடிப்படையில் பெறப்பட்ட பெயர்ச் சொற்களின் உருபனியல் அமைப்புடன் ஒப்பிட்டு மாற்றங்களையும் இழப்புகளையும் புதுமைகளையும் வெளிக்கொணரும் அடிப்படையில் தான் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

6.1. முந்தைய இயல்களின் சுருக்கம்

தமிழ்ப் பெயர்சொற்களின் வரலாற்று மொழியியல் ஆய்வுக்கு உறுதுணையாக முந்தைய இயல்களில் “தமிழ்ப் பெயர்ச் சொற்கள் பற்றிய முந்தைய ஆய்வுகள்”, “மரபிலக்கணங்களில் தமிழ்ப் பெயர்ச் சொற்கள்”, “தமிழ்ப் பெயர்ச் சொற்கள் பற்றிய விளக்கமொழியல் ஆய்வு” என்ற தலைப்புகளில் பெயர்ச்சொற்கள் ஆயப்பட்டன.

‘திராவிடப் பெயர்கள்’ என்ற தலைப்பில் சண்முகம் அவர்கள் எழுதி வெளியிட்ட நூல். அவர் தமிழ்ப் பெயர்கள் மனிதவினப் பெயர்கள், மனிதரல்லாத இனப்பெயர்கள் எனவும் மனிவினப் பெயர்கள் ஒருமைப்பெயர்கள் பன்மைப் பெயர்கள் எனவும் பகுக்கப்படுவதையும்

பன்மைப் பெயர்கள் உயர்வுப் பன்மைப் பெயர்களாக உருப்படுத்தம் பெறுவதையும் மனிதரல்லாவினப் பெயர்கள் ஒருமைப் பெயர்கள், பன்மைப் பெயர்கள் எனப் பகுக்கப்படுவதையும் மனிதரல்லாவின ஒருமைப் பெயர்கள் அஃறிணைப் பெயர்களாகவும் மனிதரல்லாவினப் பன்மைப் பெயர்கள் அஃறிணைப் பன்மைப் பெயர்களாகவும் உருப்படுத்தம் பெறுவதையும் விளக்குகின்றார்.



ஆண்பால் பெண்பால் உயர்வுப்பன்மை அஃறிணை ஒருமை அஃறிணைப் பன்மை

மேலும் ஆண்பால் ஒருமைப் பின்னொட்டுக்களாக அன், ஆன், வன், நன், ஞன், இயன், ஓன், அனன், அவன், த்தன் என்ற பதினொன்று பின்னொட்டுக்களைப் பட்டியலிட்டு சங்க இலக்கியங்களிலிருந்து எடுத்துக்காட்டுகளுடன் தருகின்றார். இது போன்று அள், இ, த்தி, ச்சி, வி, மி, ஆள், ஓள்,ஆத்தி, ஆட்டி, அனி என்ற பதினொன்று பின்னொட்டுகளைப் பெண்பாலை உணர்த்தும் பின்னொடுட்களாகப் பட்டியலிட்டு சங்க இலக்கியங்களிலிருந்து எடுத்துக்காட்டுகளுடன் தருகின்றார். மேலும் அர், இர், வர், ஞர், அவர், இயர், ஆர், ஓர், மார், அனர், கள் என்ற பின்னொட்டுகளை உயர்திணைப் பன்மைப் பின்னொட்டுகளாகப் பட்டியலிட்டு சங்க இலக்கியங்களிலிருந்து

எடுத்துக்காட்டுகளுடன் தருகின்றார். மேலும் தமிழ் மொழியில் மாற்றுப் பெயர்கள், சாரியை, வேற்றுமை பற்றியும் தகவல்கள் தருகின்றார்.

கமலேஸ்வரன் அவர்களின் “தமிழில் பெயர்கள்” என்ற தலைப்பில் கால அடிப்படையில் தமிழில் பெயர்ச்சொற்களின் ஆக்கத்தை ஆய்கின்றார். வரலாற்று காலத்தைச் சங்ககாலம், பின் சங்ககாலம் எனப் பிரித்துக்கொண்டு வரலாறு விளக்கம் தருகின்றார். இவர் சங்க இலக்கியங்களிலிருந்து தற்காலத் தமிழ் நூல்கள் மாற்றும் கிளை மொழிகல் வரையிலான தரவுகளின் அடிப்படையில் தமிழ்ப் பெயர்களின் ஆக்கத்தை ஆய்ந்து விரிவான விளக்கம் தருகின்றார். பெயர்சொல்லாக்கத்தை பூஜிய மாற்றம், அகமாற்றம், பின்னொட்டாக்கம் என மூன்றாகப் பகுத்துக்கொண்டு சங்க இலக்கியத் தரவுகளில் இருந்தும் தற்காலத் தமிழ் (பின் சங்ககாலத் தமிழ்) தரவுகளில் இருந்தும் எடுத்துக்காட்டுகள் தந்து பெயர்ச் சொல் ஆக்கங்களையும் வரலாற்று மாற்றங்களையும் விளக்குகின்றார். இவர் வினையிலிருந்தான பெயராக்கம், பெயரிலிருந்தான பெயராக்கம், பெயரடைகளிலிருந்தான பெயராக்கம் இவற்றின் அடிப்படையில் பெயராக்கத்தை விளக்குகின்றார். வினைகளைப் பொருத்தவரையில் தமிழ் லெக்சிக்கனை பின்பற்றி அதில் தந்துள்ளது போன்று வினைகளை அவை ஏற்கும் காலப் பின்னொட்டுகளின் அடிப்படையில் பன்னிரண்டு வகுப்புகளாகப் பிரித்துக்கொண்டு வினைப்பெயராக்கத்தை விளக்குகின்றார். பின்னொடுப் பெயராக்கதை விளக்குகையில் பின்னொட்டுகளை க்-இல் தொடங்குவன, ச்-இல் தொடங்குவன, ப்-இல் தொடங்குவன, வ்-இல் தொடங்குவன பிற உயிர்கள் மற்றும் மெய்களில்

தொடங்குவன எனப் பிரிந்துக் கொண்டு வினையிலிருந்தான பின்னொட்டுப் பெயராக்கத்தை விளக்குகின்றார். பெயரிலிருந்தான பெயராக்கத்தை பால்-எண் பெயர்கள் எனக் குறிப்பிட்டு பெயரடிகளைப் பத்தொன்பது வகுப்புகளாகப் பகுத்துக்கொண்டு அவை ஆண்பால், பெண்பால், பலர்பால் ஒட்டுக்களை ஏற்றுப் பெயராக்கம் செய்வதை விளக்குகின்றார். இறுதில் அவர் தரும் வரலாற்றுக் குறிப்புகள் முக்கியமான தகவகளை நமக்குத் தருகின்றது.

பதினொன்றாம் இயலின் துணையியலான 'வரலாற்றுக் குறிப்புகள்' என்பதில் வரலாற்று பால்-எண் குறித்த வரலாற்று அடிப்படையிலான சில செய்திகளை கமலேஸ்வரன் கூறிச்செல்கிறார். இரண்டாம் இயலில் கூறப்பட்ட இச்செய்திகள் மீண்டும் இங்கு தரப்பட்டுள்ளன:

தமிழில் 16 ஆண்பால் பின்னொட்டுகள் காணப்படுகின்றன. இவற்றில் *அன், ஆன், ஓன், வன், கன், ஞன்/நன், அலன், ஆளன், இயன், அவன், மான்* என்ற பதினொன்று பின்னொட்டுகள் சங்ககாலத் தமிழில் காணப்படுகின்றன. இதில் ஆண்பால் பின்னொட்டாக *ஆன்* என்பது தான் பொதுவாக அதிகமாக பழந்தமிழில் காணப்படுகின்றது. *அவ்-அன், மக்-அன், தோள்-அன், சிறு-வ்-அன்* என்பதான் சங்ககாலத்தில் இப்பின்னொட்டின் உருவாக்கத்தின் எடுத்துக்காட்டாகும். *வேந்த்-அன், மன்-ன்-அன், அரச்-அன்* என்பதில் இதன் சேர்ப்பு பிந்தைய உருவாக்கமாகத் தெரிகின்றது; ஏனென்றால் *வேந்து, மன், அரசு* என்பன பின்னொட்டு இல்லாமலேயே பழைய நூல்களின் அதே பொருளின்

வருகின்றன. பிற பின்னொட்டுக்களுக்கு வேறுப்பட்ட அளபுகளில் குறைந்த பயன்பாடு இருக்கின்றது. எடுத்துக்காட்டாக கன் என்பது சங்ககாலத்தில் கொண்-கன் என்ற ஒரே சொல்லில் மட்டும் தான் காணப்படுகின்றது. இந்த போக்கு பின் சங்ககாலத்திலும் காணப்படுகின்றது. பின்சங்ககாலத்தில் நான்கு சொற்களில் தாம் கன் என்ற பின்னொட்டு கொண்டுவருகின்றன: *விரிச்சி-கன், பட்டி-கன்* 'திருடன்'. பிற பின்னொட்டுகளில் அவன், ஆளன் என்பவைகள் தாம் சங்ககாலத்தில் கதிர்-அவன், தென்-ன்-அவன் போன்ற சொற்களில் பதடவை வருகின்றன; பின் சங்ககாலத்தில் அதிக அளவில்லான சொற்கள் இப்பின்னொட்டுகளுடன் வருகின்றன. *இளை-ய்-அவன், நம்-ம்-அவன்* என்பன எடுத்துக்காட்டுகளாகும். அலன் என்ற பின்னொட்டு கொண்ட குறைந்த எண்ணிக்கையிலான சொற்கள் (எ.கா. *புர-வ்-அலன்*) தான் சங்ககாலத்தில் வருகின்றன. இந்த குறைந்த எண்ணிக்கையிலான சொற்கள் கூட பின்-சங்ககாலத்தில் காணப்படவில்லை.

ஆன் என்ற பின்னொட்டு பழந்தமிழில் *நீக்-அன்* 'ஊர்தியோட்டி' போன்ற சொற்களிலும் பின் சங்ககாலத்தில் *வண்ண்-ஆன், அத்த்-ஆன், பிர்-ஆன்* என்ற சொற்களில் தனியான பின்னொட்டாக பழங்காலத்திருந்தே பயன்படுத்தப்பட்டிருப்பதாகத் தோன்றினாலும் இது அன் என்ற பின்னொட்டின் மாற்றுருபாகும். *புல-வ்-அன், புல-வ்-ஓன், கிழ-வ்-அன்/கிழ-வ்-ஓன்* என்ற சொற்கள் ஓன் என்பது பிந்தைய உருவாக்கம் என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றது. *க்கன், அகன், ச்சன்,*

காரன், ஆனவன், வாணன் என்பன பின் சங்ககாலத்தில் மட்டுமே காணப்படுகின்றன.

கிட்டத்தட்ட 18 பின்னொட்டுகள் பெண்பாலைச் சாரும். இவற்றில் *இ, த்தி, ஐ, வி, ஆட்டி, அள், ஆள், ஓள், அவள், மாள்* என்பன சங்ககாலத்தில் காணப்படுகின்றன. இவற்றில் இ என்பது மட்டும் தான் பெண்பால் பின்னொட்டாக சுதந்திரமாக இரு காலத்திலும் பயன்படுத்தப்பட்டது. பிற பின்னொட்டுகள் மிகக் குறைந்த பயன்பாடு உள்ளவை. எடுத்துக்காட்டாக *அள்* என்பது *மக்-அள், அவ்-அள்* என்ற குறைந்த எண்ணிகையிலான சொற்களில் தான் பயன்படுத்தப்பட்டது. இது போன்று ஐ என்பது சங்ககாலத்தில் *கொற்ற-வ்-ஐ, பரத்த்-ஐ* என்ற இரு சொற்களில் காணப்படுகின்றது மற்றும் பின் சங்ககாலத்தில் *தொத்த்-ஐ, பொது-வ்-ஐ* என்ற சொற்களில் காணப்படுகின்றது. ஆளன் என்பது போன்று அதற்கு இணையான பெண்பால் பின்னொட்டு இரு காலத்திலும் கருதத்தக்க எண்ணிக்கையிலான சொற்களில் வருகின்றன. *நன்னர்-ஆட்டி* ‘நற்குணப்பெண்’, *நொதுமல்-ஆட்டி* ‘அன்னியமான பெண்’ என்பன எடுத்துக்காட்டுகளாகும். *மாள்* என்பது இரு சொற்களில் மட்டும் வருகின்றது: *வேண்-மாள்* ‘வெளிர் இனப் பெண்’, *கோ-மாள்* ‘அரசி’. *அவள்* சங்ககாலத்தில் பயன்படுத்தப்பட்டாலும் அது பின் சங்ககாலத்தில் தான் விளைவாக்கமுள்ள பின்னொட்டாக மாறுகின்றது. எந்த பெண்பால் பெயர்களையும் பெயரடை அடிகளிலிருந்து உருவாக்க இயலும். பின்வருவன இவ்வகையிலான ஆக்கத்தின் எடுத்துக்காட்டுகளாகும்: *பெரி-ய்-அவள்* ‘அக்காள்’, *சிறி-ய்-*

அவள் ‘தங்கை’. இவ்வெல்லா பின்னொட்டுகளும் பின் சங்ககாலத்தில் காணப்படுகின்றன. இவற்றுடன் *அத்தி, ச்சி, அச்சி, இச்சி, த்தை, ஆத்தி, க்கி, அகி, காரி* என்பனவும் பின் சங்ககாலத்தில் பயன்படுத்தப் படுகின்றன. *காரி* தற்காலத் தமிழில் விளைவாக்கம் உள்ளவையாகத் தெரிகின்றது.

பெண்பாலுக்கும் ஆண்பாலுக்கும் தனித்தனியான பன்மைப் பின்னொட்டுகள் இல்லை. இரண்டுக்கும் ஒரே பின்னொட்டுகள் தாம் பயன்படுத்தப்படுகின்றன. *அர், ஆர், ஓர்* என்பன இருகாலத்திலும் காணப்படும் பன்மைப் பின்னொட்டுகளாகும். தற்காலத் தமிழில் *அர்* என்பதற்குப் பதிலாக ஆர்கள் பயன்படுத்தப்படுகின்றது. *அண்ணன்-மார், தாய்-மார், தம்பி-மார்-கள், மனைவி-மார்-கள்* என்ற சொற்கள் மார், மார்கள் என்ற பன்மைப் பின்னொட்டுக்களுடன் தற்காலத் தமிழில் பயன்படுத்தப்படுகின்றன.

“தமிழில் பெயர்த் தொகை ஆக்கம்” என்ற தமது ஆய்வு நூலில் விஜய வேணுகோபால் அவர் காலத்திய மாற்றிலக்கணக் கோடுபாடுகள் அடிப்படையில் பெயர்த்தொகை ஆக்கங்களை அதாவது கூட்டுப் பெயர்களை ஆய்கின்றார். கூட்டுப் பெயர்களை வாக்கியங்களிலிருந்து மாற்று விதிகளால் ஆக்கப்பட்டவைகளாகக் கொண்டு கூட்டுப் பெயரக்கத்தை விளக்குகின்றார். மேலும் கூட்டுக்களை முதல் அங்கம் செயப்படுபொருளாய் வரும் கூட்டுகள், இரண்டாம் அங்கம் கேண்மைச் செயப்படுபொருளாய் வரும் கூட்டுகள், இரண்டாவது அங்கம் எழுவாயாய் வரும் கூட்டுகள், காலம் இரண்டாவது அங்கமாய் வரும்

கூட்டுகள், பிற வகைகள், சமநிலை உள்வட்டக் கூட்டுகள், உவம உருவகப் பெயர்க் கூட்டுகள், மரபுப் பெயர்க் கூட்டுகள், பல்பெயர்க் கூட்டுகள் எனப் பகுத்துக்கொண்டு விளக்கங்கள் தருகின்றார்.

“சொல்லியல்: பெயரியல்” என்ற தலைப்பில் அகத்தியிலிங்கம் தற்காலத் தமிழ்த் தரவுகளின் அடிப்படையில் பெயர்ச் சொற்களின் வருணனை மொழியியல் ஆய்வைத் தருகின்றார்.

அகத்தியலிங்கம் ஒ (பூஜியம்), ன் ஆகியவற்றைத் தன்மை, முன்னிலை பதிலிடு பெயர்களில் ஒருமையைக் குறிப்பிடும் பின்னொட்டுக்களாகக் காட்டுகின்றார்.

நீ + ஒ > நீ

நா + ன் > நான், எ + ன் > என், தா+ன் > தான், உ+ன் > உன்

ங்கள் என்பதை தன்மை, முன்னிலை பதிலிடுபெயர்களில் பன்மையைக் குறிப்பிடும் பின்னொட்டுகளாகக் காட்டுகிறார்.

நீ+ங்கள் > நீங்கள், எ+ங்கள் > எங்கள், உ+ங்கள் > உங்கள், தா+ங்கள் > தாங்கள்,

ம் என்பதை நா, ந என்ற தன்மை ஒருமை அடிகளுடன் இணைக்கப்படும் உளப்பாட்டுத் தன்மைப் பன்மை எனக் குறிப்பிடுகின்றார்.

நா+ம் > நாம், ந+ம் > நம்

ங்கள் என்பதை நா, எ என்ற தன்மை ஒருமை அடிகளுடன் இணைக்கப்படும் விலக்கீட்டுத் தன்மையைக் காட்டும் பின்னொட்டாகக் கொள்கின்றார்.

“ஆட்சிச் சொல்லுக்குச் சிறப்புக் குறிப்புடன் தற்காலத் தமிழ்ச் சொல்லாக்கம்” என்ற தலைப்பில் மறைமலை அவர்கள் வருணனை மொழியியல் கோட்பாட்டைப் பயன்படுத்தி ஆட்சிச் சொற்றொகைத் தரவு அடிப்படையில் பெயராக்கத்தை ஆய்கின்றார். இவர் ஒட்டுவழிப் பெயராக்கத்தை முன்னொட்டு வழிச் சொல்லாக்கம் பின்னொட்டுவழிச் சொல்லாக்கம் என்று பிரித்து ஆட்சிசொற்றொகையில் காணப்படும் ஒட்டாக்கங்களை எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குகின்றார். பெயர்கள் இணைந்து பெயராக்கம் செய்வதை இருபெயர்த் தொகையாக்கம், பல்பெயர்த் தொகைச் சொல்லாக்கம், கூட்டுச் சொல்லாகம் என மூன்று இயல்களில் விளக்குகின்றார். மேலும் ஏனைய சொல்லாக்கங்கள் என்ற தலைப்பில் வினைதரு பெயர்கள், பெருவழக்குப் பெறாத சில சொல்லாக்கங்கள், கடன் நீட்சி, கடன் ஒட்டு அல்லது கடன் கலவை என்ற ஆக்கங்களை விளக்குகின்றார். இது தவிர சொல்லாக்கத்தில் வரும் சிக்கல்களையும் நிலைபேறாக்கம் பற்றியும் சொல்லாக்கமும் மொழிமாற்றமும் என்பது பற்றியும் விளக்கிச் செல்கின்றார். தற்காலத் தமிழில் பெயராக்கம் பற்றி அறிய நல்ல ஒரு ஆய்வேடாக இது அமைகின்றது.

“தமிழில் சொல்லாக்கம்” என்ற தலைப்பில் அமையும் இராசேந்திரன் அவர்களின் நூல் பெயராக்கம் பற்றி விரிவாகக் கூறுகின்றது. இவர் சொல்லாக்கக் கோட்பாடு பற்றி முதல் ஆறு இயல்களில் ஒரு விரிவான விளக்கம் தருகின்றார். அடுத்து ஏழாவது இயலில் தமிழில் சொல் வகைப்பாடுகள் பற்றி விளக்குகின்றார். எட்டாவது இயலில் தமிழில் சொல்லாக்க வகைப்பாடுகள் பற்றி

ஆய்கின்றார். தமிழில்சொல்லாகத்தின் பரிமாணம் என்ற தலைப்பில் பெயராக்கம், வினையாக்கம், பெயரடையாக்கம், வினையடையாக்கம் என்பன பற்றி விரிவாக ஆகின்றார். பெயராக்கத்தைப் பெயரிலிருந்து பெயராக்கம், வினையிலிருந்து பெயராக்கம், பெயரடையிலிருந்து பெயராக்கம் என மூன்றாகப் பகுத்து ஆய்கின்றார். பெயர்களிலிருந்தான ஆக்கத்தை பின்னொட்டுப் பெயராக்கம், முன்னொட்டாக்கம், கூட்டாக்கம் என வகைப் படுத்தி விளக்குகின்றார். வினையிலிருந்தான பெயராக்கதை கிளைப்படமாகத் தந்து விளக்கியுள்ளார்.

லட்சுமணன் அவர்களின் சங்க இலக்கியக்கூட்டுச்சொற்கள் (தொகுப்பும் ஆய்வும்) என்ற ஆய்வில் கூட்டுச் சொற்களை மரபிலக்கணப் பின்னணியில் விளக்கம் தருகின்றார்.

தமிழ்ப் பெயர்களை வரலாற்று மொழியியல் அடிப்படையில் ஆய்வதற்கு முன் பழந்தமிழ் தரவுகள் அடிப்படையில் எழுத்தப்பட்ட மரபிலக்கணங்கள் தமிழ்ப் பெயர்களைப் பற்றி எத்தகைய விளக்கங்களைத் தருகின்றன என்று அறிந்துகொள்வது மிக இன்றியமையாதது ஆவதன் காரணமாக ‘மரபிலக்கணங்களில் தமிழ்ப் பெயர்கள்” என்ற தலைப்பில் இவ்வியலில் தொல்காப்பியம், நன்னூல் போன்ற சில முக்கியமான மரபிலக்கணங்களிலும் தொடர்புள்ள உரைகளிலும் தமிழ் பெயர்குறித்து தரப்பட்டுள்ள செய்திகளும் விளக்கங்களும் இங்கு சுருக்கமாகத் தர முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. மரபிலக்கணக்கணங்கள் பெயர்களை உயர்திணைப் பெயர், அஃறிணைப் பெயர், இருதிணைப் பொதுப் பெயர் அல்லது விரவுப் பெயர் என மூன்றாக வகைப் படுத்தும். தொல்காப்பியர் உயர்திணைப் பெயர்களை

நிலப் பெயர்கள், குழுவின் பெயர்கள், வினைப் பெயர்கள், உடைப் பெயர்கள், பண்புகொள் பெயர்கள், பல்லோர் குறித்த முறைநிலைப் பெயர்கள், பல்லோர் குறித்த சினைநிலைப் பெயர்கள், பல்லோர் குறித்த திணைநிலைப் பெயர்கள், இன்றிவர் என்னும் எண்ணுப் பெயர்கள் என பத்தாகப் பகுப்பார். தொல்காப்பியர் ஆறு ஒருமைச் சுட்டுப் பெயர்களையும் ஆறு பன்மைச் சுட்டுப் பெயர்களையும் முன்று வினாப் பெயர்களையும் அஃறிணைப் பெயர்களாகப் பட்டியலிட்டு வேறு சிலவற்றையும் இதில் உள்ளடக்குகின்றார். அஃறிணை விரவுப் பெயர்களாக வரும் நிலையும் விளக்கப்பட்டுள்ளது.

பெயர்ச் சொற்கள் மேலும் ஆண்பெயர், பெண்பெயர், ஒன்றன் பெயர், பலவற்றின் பெயர் என நான்கு இயற்பெயர்களாகவும் ஆண் சினைப் பெயர், பெண் சினைப் பெயர், ஒன்றன் சினைப் பெயர், பலவற்றின் சினைப் பெயர் என நான்கு சினைப் பெயர்களாகவும் ஆண் முறைப் பெயர், பெண்முறைப் பெயர் என இரண்டு முறைப் பெயர்களாகவும் தொல்காப்பியரால் பகுக்கப்படுகின்றன. வினையாலணையும் பெயர்கள் தெரிநிலை வினையாலணையும் பெயர்கள், குறிப்பு வினையாலணையும் பெயர்கள் என அமைகின்றன.

தொகைப் பெயர்களைப் பற்றி மரபிலக்கணங்கள் விரிவாகப் பேசுகின்றன. தொகைகளை வேற்றுமைத் தொகை, உவமைத் தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உம்மைத் தொகை, அன்மொழித்தொகை என ஆறாகப் பகுத்து தொல்காப்பியம் ஆய்கின்றது. உரையாசிரியர்களும் தொகை பற்றி தங்கங்கள் விளக்கங்களை

தருகின்றனர். நன்னூல் தொல்காப்பிய உரையாசிரியர் இளம்பூரணரின் உரையைப் பின்பற்றி தொகைகளை விளக்குவதாகத் தெரிகின்றது.

தமிழ் ஒரு திராவிட மொழி. இம்மொழி வினைச்சொல்லை இறுதியாகக் கொண்ட வாக்கியங்களை உடையதாகும். இம்மொழி இலக்கணச் செயற்பாங்குகளை (அதாவது இலக்கணப் பொருண்மைகளை) உருபனியல் நிலையில் வெளிப்படுத்தும் ஒட்டுக்கள் நிறைந்த மொழியாக விளங்குகிறது. இம்மொழி உள்ள ஒவ்வொரு வேர் உருபனும் ஆயிரக்கணக்கான சொற்களின் உருவாக்கத்திற்கு (அதாவது திரிபு மற்றும் ஆக்க வடிவுகளின் உருவாக்கத்திற்கு) அடிப்படையாக அமைகிறது. தமிழ் வாக்கியங்கள் எழுவாய்தொடரையும் வினையையும் கொண்ட அமைப்பாகவோ எழுவாய்த் தொடரையும் செயப்படுபொருள் தொடரையும் வினையும் கொண்ட அமைப்பாகவோ அமையும்.

“தமிழ்ப் பெயர்சொற்கள் பற்றிய விளக்கமொழியியல் ஆய்வு” என்ற நான்காவது இயலில் தமிழ்ப் பெயர்சொற்கள் பற்றிய வரலாற்று மொயியல் ஆய்வுக்கு உறுதுணையாக தற்காலத் தமிழ் தரவுகள் அடிப்படையில் தற்காலத் தமிழின் பெயர்சொல் பற்றி ஒரு வருணனை மொழியியல் விளக்கம் தரப்பட்டுள்ளது. சங்ககாலத் தமிழில் பெயர் சொற்களின் இலக்கண அமைப்பைப் அறிந்து கொண்டு அதைத் தற்காலத் தமிழில் பெயர்ச் சொற்களின் இலக்கண அமைப்புடன் ஒப்பிட்டு வரலாற்று அடிப்படையிலான மாற்றங்களைப் புரிந்து கொள்ள இயலும் என்ற அடிப்படையில் இவ்வியலின் செய்திகள் அமைகின்றன. பெயர்சொற்களின் உருபனியல் அமைப்பு பற்றிய சுருக்கமான விளக்கம்

தரப்பட்டுள்ளது. பெயர்கள் எண்களுக்கும் வேற்றுமைக்கும் திரிபுறுவது குறித்தும் வேற்றுமை ஏற்கும் போது பெயர்ப்பகுதிகள் திரிபுறுவது குறித்தும் விளக்கம் தரப்பட்டுள்ளது. வேற்றுமைக்குத் திரிபுறுவதன் காரணமாக பெயர்ப் பகுதி திரிபுற்ற பகுதி, திரிபுறாப் பகுதி என அமையும். பெயர்ப் பகுதியுடன் பன்மைப் பின்னொட்டு, திரிபு பின்னொட்டு, ஒலிநிரவல் பின்னொட்டு, வேற்றுமைப் பின்னொட்டு என்பன இணைவது குறித்து விளக்கம் தரப்பட்டுள்ளது. இறுதியில் பெயரொட்டுக்கள் தரப்பட்டுள்ளன.

”தமிழ்ப் பெயர்ச்சொற்கள் பற்றிய வரலாற்று மொழியியல் ஆய்வு” என்ற இவ்வாய்வேட்டின் தலைப்பு அடிப்படையிலான ஐந்தாவது இயலில் சங்கத் தமிழ் நூற்களில் கையாளப்படும் பெயர்ச் சொற்களின் உருபனியல் அமைப்பைத் தற்காலத் தமிழ்ப் பெயர்ச்சொற்களின் உருபனியல் அமைப்பைப்புடன் ஒப்பிட்டு அவை திரிபு நிலையிலும் ஆக்கநிலையிலும் எவ்வாறு வேறுபட்டு அல்லது மாற்றத்திற்கு உள்ளாகி நிற்கின்றன என்பது பற்றி ஆய்ந்து கண்டறிந்த செய்திகள் தரப்பட்டுள்ளன.

6.2. பெயர்ச் சொல்லாக்கத்தின் வரலாற்று மாற்றம்

“ஒரு மொழி வாழும் மொழியாக வழக்கு மொழியாகத் திகழவேண்டுமானால் காலத்திற்கேற்பவும் சமுதாயப் பண்பாட்டு மாற்றங்களுக்கு ஏற்பவும் அம்மொழி மாற்றங்களுக்கு உட்படவேண்டும்” என எட்சுலர் (Hertzler, 1965:141) என்னும் சமுதாய மொழியில் வல்லுநர் கூறுவார். ஒரு சமுதாயத்தில் கருத்துப் பரிமாற்றத்திற்குப் பயன்படும் தலைச் சிறந்த கருவியாகிய மொழி

அச்சமுதாயம் அடையும் பல்வேறு மாற்றங்களாலும் தாக்கமுறுகின்றது; அதன் விளைவாக அம்மொழியில் ஒலியமைப்பிலும் சொல்லமைப்பிலும் தொடரமைப்பிலும் சொற்களின் பொருள் புலப்பாட்டிலும் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுகின்றன. இதை வரலாற்று அடிப்படையிலான மொழி மாற்றம் எனலாம்.

மொழி மாற்றம் ஒரு மொழியில் சில குறிப்பிட்ட காலங்களில் மிக வேகமாக நடைபெறலாம். மொழி வழங்கும் சமுதாயத்தில் ஏற்படும் மாற்றங்களும் அச்சமுதாயதைப் பாதிக்கும் பல்வேறு நிகழ்ச்சிகளும், செயல்களுமே இம்மாற்றங்களுக்குக் காரணமாக விளங்குகின்றன. அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சி, தலைச் சிறந்த அறிஞர்கள், இலக்கியப் படைப்பாக்கங்கள், மொழி சீர்திருத்த இயக்கம், சமுதாய அமைப்பு முறையிலான மாற்றங்கள், புதிய கருத்துக்களின் வளர்ச்சி, நாகரிகமாகக் கருதப்படும் மொழிநடை, பிற மொழி பேசும் மக்களுடன் ஏற்படும் தொடர்பு, நாடுவிட்டு நாடு பெயர்தல், உலகச் சுற்றுப் பயணம், காலணியாதிக்கம், வணிகம், தொழில், புறச் சமயங்களின் ஆதிக்கம் அல்லது சமய மாற்றம், பண்பாட்டு மாற்றம் போன்றவை மொழிமாற்றத்திற்குக் காரணமாக விளங்குகின்றன என்கிறார் எர்ட்சிலர். இவற்றுள் அறிவியல்-தொழிநுட்ப காரணிகளைப் பற்றி விளக்குமிடத்து புதிய சொல்லாக்கம், கடன் வாங்கல், பழைய சொற்கள் வழக்கழிதல் ஆகியவற்றால் இவை மொழி மாற்றத்தை ஏற்படுத்துவதாக அவர் விளக்குகின்றார். இது பெயராக்கமாற்றத்திற்கும் பொருந்தும்.

புதிய சொற்களால் ஏற்படும் மாற்றங்களை பின்வருமாறு வகைப்படுதி விளக்கலாம்:

1. ஒலியமைப்பில் மாற்றம்
2. சொல்லமைப்பில் மாற்றம்
3. தொடரமைப்பில் மாற்றம்
4. பொருட்புலபாட்டில் மாற்றம்

ஒலியமைப்பில் மாற்றம்

தற்காலத் தமிழில் பெயர்சொல்லாக்கத்தில் தமிழுக்குப் பொருந்தாத ஒலியனியல் அமைப்பு நீக்கப்பட்டு வருவதை ஒரு வரலாற்று மாற்றமாகக் காணலாம். எடுத்துக்காட்டாக ரயில் நிலையம் என்பது இரயில் நிலையம் எனமாறி பின்னர் புகைவண்டி நிலையம் என மாறிவிட்டதை அறியலாம். பஸ் நிலையம் என்பது பேரூந்து நிலையம் என மாறிவிட்டது. ர், ல் என்ற ஒலியன்களால் அல்லது எழுத்துக்களால் தொடங்கப்படும் சொற்கள் அதற்கு பொருத்தமான தமிழ்ச் சொற்களால் இடப்பெயர்ச்சி செய்யப்பட்டுள்ளதை உணரலாம்.

சொல்லமைப்பில் மாற்றம்

பெயர்சொற்கள் பல அவற்றின் சொற்றன்மை இழந்து விகுதிகளாக அல்லது பின்னொட்டுட்டுக்களாகவும் முன்னொட்டுகளாகவும் பயன்படுத்தப்படுவதை வரலாற்று அடிப்படையிலான சொல்லாக்கம் சார் மாற்றமாகக் கருதலாம். எடுத்துக்காட்டாக அகம், இயல் என்ற சொற்கள் விகுதிகள்/பின்னொட்டுக்களாக விளைவாக்கமாகப் பயன்படுத்தப்படுவதைத் தற்காலத் தமிழ்த் தரவு நமக்கு வெளிப்படுத்தும்.

பெயர்+அகம்	அச்சகம், அஞ்சலகம், அமைச்சகம், அலுவலகம், ஆய்வகம், உணவகம், காப்பகம், தூதரதகம், நூலகம், மருந்தகம்
பெயர்+இயல்	அமைப்பியல், அரசியல், அழகியல், அளவியல், அறிவியல், இயக்கவியல், உடலியல், உடற்கூற்றியல், உயிரியல், உளவியல், மொழியியல், நடையியல்
பெயர்+ஆள்	பணியாள், பதிலாள், மேலாள்

முன்னொட்டாக்கம் தமிழால் ஏற்றுக்கொள்ளப்படத் தயங்கும் பெயராக்கம் ஆகும். ஆனால் தற்காலத் தமிழ் தரவுகள் முன்னொட்டாக்கத்தை உறுதி செய்கின்றன.

முன்+பெயர்	முன்-ஆய்வு, முன்-இருப்பு, முன்-எச்சரிக்கை, முன்-அறிவிப்பு, முன்-தணிக்கை, முன்-பணம்
பின்+பெயர்	பின்-விளைவு, பின்-ஏற்பு, பின்-துணை,
மேல்+பெயர்	மேல்-வரி, மேல்-ஆள், மேல்-ஆணை, மேற்-பரப்பு,

தொடரமைப்பில் மாற்றம்

பனைமரம் போன்று சிறப்புப் பெயர் + பொதுப் பெயர் என்ற அமைப்பில் புதிய பெயர்கள் உருவாகியுள்ளது தொடரமைப்பில் ஏற்பட்ட மாற்றமாகக் கருதலாம்.

எ.கா. மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, வேளாண்மைக் கல்லூரி

ஆங்கிலம் போன்று இணைப்புக் கோடுகளைப் பயன்படுத்தி கூட்டுக்களை ஆக்கும் முறை தற்காலத் தமிழ் தரவில் காணப்படுகின்றது.

பொருள் புலப்பாட்டில் மாற்றம்

பழைய சொற்கள் புதுப் பொருள் பெற்று பயன்படுத்தப்படுவதைத் தற்காலத் தமிழ்த் தரவுகளிலிருந்து அறியலாம். காவல் என்பது வரவேற்கப் பட்ட சொல்லாக தொடக்க காலத்தில் அமையவில்லை. ஆனால் வரலாற்று மாற்றத்தால் காவலர் என்பது போலீஸ் என்பதைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றது. இது போன்று பணிமனை என்பது ஆங்கிலச் சொல்லான வர்க்ஷாப் என்பதற்கு இணையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது. இது போன்று பல எடுத்துக்காட்டுகளைக் காட்ட இயலும்.

நோக்கீட்டு நூல்கள்

சங்க இலக்கிய நூல்கள்

அகநானூறு களிற்றுயானை நிரை. பொ.வெ.சோமசுந்தரனார் *(உரை).* மறுபதிப்பு, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, 1981.

அநானூறு நித்திலக்கோவை. பொ.வெ.சோமசுந்தரனார் *(உரை).* மறுபதிப்பு, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, 1977.

அகநானூறு மணிமிடைப் பவளம். பொ.வெ.சோமசுந்தரனார் *(உரை).* மறுபதிப்பு, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, 1976.

ஐங்குறுநூறு. பொ.வெ.சோமசுந்தரனார் *(உரை).* மறுபதிவு, சைவசித்தாந்த நூற்கழகம், சென்னை, 1961.

கலித்தொகை நச்சினார்க்கினியர் உரை. பொ.வெ.சோமசுந்தரனார் *(விளக்கவுரை).* மறுபதிவு, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, 1981.

குறுந்தொகை. உ.வே.சாமிநாதர் *(உரை).* அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு, அண்ணாமலை நகர், 1983.

தொல்காப்பியம்: **சொல்லதிகாரம்**: **இளம்பூரணார் உரை** (**பதிப்பு** 1973), சைவசித்தாந்த நூற்கழகம், சென்னை,.

தொல்காப்பியம்: சொல்லதிகாரம்: கல்லாடனார் உரை (பதிப்பு 1964), சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை.

தொல்காப்பியம்: சொல்லதிகாரம்: சேனாவரையர் உரை (பதிப்பு 1963), சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை,.

தொல்காப்பியம்: சொல்லதிகாரம்: தெய்வச்சிலையார் உரை (பதிப்பு 1974), சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை.

தொல்காப்பியம்: சொல்லதிகாரம்: நச்சினார்க்கினியர் உரை (பதிப்பு 1973), சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை.

நற்றிணை நானூறு மூலமும் உரையும். பின்னத்தூர் சு. நாராயணசாமி ஐயர் (உரை), பொ.வெ.சோமசுந்தரனார் (ஆய்வுரை). மறுபதிப்பு, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, 1981.

நன்னூல்: காண்டிகை உரை. ஆறுமுக நாவலர் (உரை). சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, 1951.

பத்துப்பாட்டு நச்சினார்கினியர். உ.வே.சாமிநாதையர் (குறிப்புரை). நிழற்படப் பதிப்பு, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

பதிற்றுப்பத்து மூலமும் உரையும். ஔவை சு. துரைசாமிப்பிள்ளை (உரை), மறுபதிப்பு, சைவசித்தாந்த நூற்கழகம், சென்னை, 1973.

பரிபாடல் மூலமும் உரையும். பொ.வெ.சோமசுந்தரனார் (உரை). மறுபதிப்பு, சைவசித்தாந்த நூற்கழகம், சென்னை, 1973.

புறநானூறு மூலமும் உரையும். உ.வே.சாமிநாதையர் (உரை), உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை, 1971.

புறநானூறு (1-200). ஔவை சு. துரைசாமிப்பிள்ளை (விளக்கவுரை), மறுபதிப்பு, சைவசித்தாந்த நூற்கழகம், சென்னை, 1973.

புறநானூறு (201-400). ஔவை சு. துரைசாமிப்பிள்ளை (விளக்கவுரை), மறுபதிப்பு, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, 1972.

பிற நோக்கீடுகள்

அகத்தியலிங்கம், ச. சொல்லியல்:பெயரியல், அனைத்திந்திய மொழியியற் கழகம், அண்ணாமலை நகர்.

ஆட்சிச் சொல்லகராதி. தமிழ் வளர்ச்சி இயக்குநர், தமிழ்நாடு அரசு.

இராசேந்திரன், ச. தமிழில் சொல்லாக்கம். மொழியியல். 13, 14: 163-192.

இராசேந்திரன், ச. 2001. தற்காலத் தமிழ்ச் சொற்களஞ்சியம். தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

இராசேந்திரன், ச.2004. தமிழில் சொல்லாக்கம். தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி. க்ரியா, சென்னை 1992.

கலைச்சொல் அகராதி. (கணிதம், பௌதிகவியல், வேதியல், தாவரவியல், விலங்கியல், உளவியல், புவியல், வரலாறு, பொருளாதாரம், அரசியல், வாணிகவியல், புள்ளியல், பொறியியல், தொழில் நுட்பவியல்). சென்னை: தமிழ்நாட்டுப் பாடல்நூல் நிறுவனம்.

கருணாகரன், கி, ஜெயா, வி. 1986. தமிழில் புதுச்சொல்லாக்கம். மொழியியல் 8.3, 4:91-116.

கலைச் சொல் அகராதிகள். தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

கோதண்டராமன், பொன். 1972. இலக்கிய உலகில் புதிய பார்வை. தமிழ் நூலகம், சென்னை.

கோதண்டராமன், பொன். 1973. இலக்கண உலகில் புதிய பார்வை. தமிழ் நூலகம், சென்னை.

கோதண்டராமன், பொன். 1979. இலக்கிய உலகில் புதிய பார்வை. தமிழ் நூலகம், சென்னை.

கோதண்டராமன், பொன். சொல்லாக்க நெறிமுறைகள். தமிழ் ஆய்வு 7, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை.

கோதண்டராமன், பொன். 1989. சொல்வகை அல்லது இலக்கணக்கூறுகள். தமிழ் இலக்கணக் கருத்தரங்கு, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

சக்திவேல், எஸ்., இராசேந்திரன், எஸ். 1995. சொற்கள்: வாழ்வும் வரலாறும், மணிவாசகம் பிரிண்டர்ஸ், சென்னை.

சண்முகம், செ.வை. 1986. சொல்லாகக் கோட்பாடு-2. அண்ணாமலை நகர்: அனைத்திந்திய மொழியியற் கழகம்.

சுப்பையா, கோ. 1983. வினையடிப் பெயர்கள், மொழியியல், 7.1 & 2:95-111.

சுப்பையா, கோ. 1984. கூட்டுப் பெயர், மொழியியல், 7.1. & 2: 187-191.

பாலசுந்தரம், ச. 2005. இருபதாம் நூற்றாண்டிற்காகன தமிழிலக்கணம் உரைநடை நூல் – சொற்படலம். தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

லட்சுமணன், அ. 2009. சங்க இலக்கியக் கூட்டுச் சொற்கள் (தொகுப்பும் ஆய்வும்). இராசையா வெளியீடு, சீனிக்குடிக்காடு, திருவாரூர்.

Agesthialingom, S. 1962. Description of language of patiRRuppattu with transliteration, translation and Index. PhD Dissertation, Kerala University.

Agesthialingom, S. 1964. Tamil nouns. Anthropological linguistics, 6.1.7-12.

Agesthialingom, S. and Shanmugam S.V.1970. The language of inscriptions (1250-1350), Annamalai University.

Andronov,M. The standard grammar of Modern and classical Tamil. New Century Book house Private Ltd., Madras.

Ananthakrishna Pillai, A. 1969. Descriptive Grammar of Early Middle Tamil. PhD Thesis, Poona University.

Arden, A.H. 1954. A progressive grammar of common Tamil. Madras.

Aronoff M. 1976. Word Formation in generative grammar, MIT press, Cambridge, MA

Arunachalam, P. History of Tamil Syntax – the period of Tolka:ppiyam and Sangam. PhD Thesis, Annamalai University.

Burrow,T and Emenearu 1961. A Dravidian Etymological Dictionary (DED), Oxford.

Burrow,T and Emenearu 1968. A Dravidian Etymological Dictionary: Supplement (DEDS), Oxford.

Caldwell, R. 1956. A comparative grammar of the Dravidian or South Indian Family of languages, Madras.

Chomsky, N. 1970. Remarks on nominalization. In: Jacobs R and Rosenbaum P. (eds) Readings in English transformational grammar. Blaisdell, Waltham, MA.

Dhamotharan, A. 1966. The grammar of Tirukkural with transliteration, translations and Index. Kerala University, Trivandrum.

Emenau, M.B. 1966. “Some South Dravidian” noun-formatives, Indian Linguistics, 27, 21-30.

Ganesan Ambedkar, 1998. Strategies in the formation of word-level equivalence with special reference to Tamil Words. CALTS,University of Hyderabad,Hyderabad.

Gopinathan Nair, B. 2003. Comparative Dravidian Noun Morphology, 61-75,

Isrel, M. 1964. “tolil peyar in tolkaapppiyam”, tenmoli.

Ramakrihsna Reddy (ed.) Word-structure in Dravidian, Dravidian University, Kuppam, 2003.

Kamaleswaran, K.S. 1974. Nouns in Tamil. PhD thesis submitted to Annamalai Universiy, Chidampabarm.

Kamatchnathan, A. Grammatical study of Narrinai with transliteration, translation and Index, PhD Thesis. Kerala University, Trivandrum.

Kamatchi Srinivasan, 1962. The language of Iraiyanar Akpporul urai (linguistics studies), MLitt. Thesis, Annamalai University.

Kothandaraman, P.1972. Studies in Tamil Linguistics, Tamil nuulakam, Madras.

Lees, R.B. 1963. The Grammar of English Nominalization. The Hague: Mouton.

Lehmann, Thomas. 1989. A Grammar of Modern Tamil. Pondicherry: Pondicherry Institute of Linguistics and Culture.

Levi, J.N. 1978. The Syntax and Semantics of Complex Nominals. Academic Press, New York.

Meenakshisundaram, T.P. 1965. A History of Tamil Language. First edition, Linguistic Society of India, Deccan College, Poona.

Maramalai, I.1984. Word-formation in Modern Tamil with special reference to administrative terms. Unpublished PhD Thesis submitted to University of Madras, Madras.

Murugarathnam, T.1966. A morphological study of ancient Tamil with special reference to akana:nu:Ru. Madras University.

Rajam, V.S. 1992. Reference Grammar of Classical Tamil Poetry. American Philosophical Society, Philadephia.

Natarajan, R. Manimeekalai as an epic (with index). PhD Thesis. Annamalai university.

Nithyakalyani, R. The languages of naRRiNai. MLitt thesis, Annamalai University.

Paramasivam, K. 1971. "Verbal Nouns in Literary Tamil." In: V.I.Subramoniam (ed.) Proceedings of the First Conference of Dravidian Linguists. Trivandrum: Dravidian Linguistic Association.

Parameswari, A.The language of TirukkuRaL. Mlitt thesis. Annamalai University.

Pillai, M. S. 1961. "Derivative Nouns in Modern Tamil". Indian Linguistics 22:145-159.

Rajendran, S. 1997. Grammatical formalism and computational analysis of Nominal Compounds in Tamil. South Asian language Review 7.1, 27-46.

Rajendran, 2000. Types of word formation in Tamil. Asher, R.E. & Harris, R. (ed.) Linguisticoliterary, Pilgram Book Pvt. Ltd.323-343.

Rangan, K and Suseela, M. 2003. Compound formation in Tamil. 4-18.

Rajendran, S. 1983. Semantics of Tamil Vocabulary. (UGC sponsored Postdoctoral Research Work in manuscript). Poona: Deccan College Post Graduate and Research Institute.

Rajendran, S. 1997. “Grammatical Formalism and Computational Analysis of Nominal Compounds in Tamil.” South Asian Language Review 7.1: 27-46.

Rajendran, S. 1997. “Aspects of Teaching 'IZATIONS' in Tamil.” *tamizhiyiyal*, Journal of Tamil Studies 51 & 52:210-227.

Rajendran, S. 2000. “Types of Word Formation in Tamil”. In: Asher, R.E. and Harris, R. (eds). Linguisticoliterary, 323-343. Delhi: Pilgrims Books Pvt. Ltd.

Rajendran, S. 2001. Word formation in Tamil. (UGC sponsored Major Project Report in manuscript). Thanjavur: Tamil University.

Rajendran, S. 2001. “Typology of Nominalization in Tamil.” Language in India 1:7, www.langugeinindia.com

Rajendran, S. 2003. “Strategies in the Formation of Nouns in Tamil.” Language in India 3:7, www.languageininida.com

Rajendran, S. 2004. “Strategies in the Formation of Compound Nouns in Tamil.” Language in India 4:7, www.languageinnida.com

Rajendran, S., Arulmozi, S., Ramesh Kumar S and Viswanathan S. 2003. Computational Morphology of Verbal Complex. 376-396.

Sadhasivam, R. 1961. A Study of ainkuRunuuRu. MLitt thesis, Madras University.

Shanmugam, S.V. 1968. The language of Tamil inscriptions (1350 to 1700), PhD thesis, Annmalai University.

Shanmugam, S.V. 1969. “Gender-number suffixes in Old Tamil nouns”, All India Oriental Conference, XXV session, Jadavpur.

Shanmugam, S.V. Dravidian Nouns (A Comparative study), Annamalai University. Annamalainagar.

Sanmugam Pillai, M. 1961. “Descriptive nouns in Modern Tamil”, Indian Linguistics, 22, 145-159.

Shastry, M.B. 1965. “Derivative suffixes”, Seminar on Grammatical theories in Kannada, Annamalai University, Annamalainagar.

Subbaiyya, K.V. 1910-11. A Comparative grammar of Dravidian languages: Nouns-gender and nouns and cases, Indian Antiquary vol. 39-40.

Subrahmaniyan, S. 1966. Pre-pallavan Tamil Index. University of Madras.

Subramaniyan, S.V. 1965. Descriptive grammar of cilappatika:ram with Index, Madras.

Subramaniyan, S.V. 1972. Grammar of AkanaanuuRu with Index. University of Kerala, Trivandrum

Subramoniyam, V.I. Index of puRanaa:nu:Ru. Trivandrum.

Sundaram, Rm. 1964. Grammatical study of pattuppa:ttu (with index, text and translations). PhD Thesis, Kerala University, Trivandrum.

Tamil Lexicon. Volumes 1-6 & Supplement, reprint 1982, University of Madras, Madras.

Thinappan, SP. 1964. Language of pazhamozhi. Mlitt Thesis, Annamlai University.

Varadarajan, M. 1966. “Verbal nouns in grammars”, Seminar on Grammatical theories in Annamlai University, Annamalainagar.

Vijavenugopal, G.1979. Nominal Composition in Tamil. Madurai Kamaraj University, Madurai.

Zvelebil, Kamil. 1957. “Verbal nouns in early old Tamil”, Tamil Culture VI, 2, 87-91.

Zvelebil, Kamil, Yu. Gasov, M. Andronov. 1967. Introduction to the Historical Grammar of Tamil language Part I – Preliminary Textual Analysis, USSR Academy of Sciences, Institute of People of Asia, Nauka Publishing house, Central Department of Oriental Literature, Moscow.

Zvelebil, Kamil, Vachek, Jaroslav, 1970. Introduction to the Historical Grammar of Tamil Language, Oriental Institute of America, Publishing House of the Czechoslovak Academy of Sciences, Prague.